**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 55/2022**
**Prosecution Witness**:1

| Name | கோவிந்தராஜ் (PW1) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது செங்கோடம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.12.2019ம் தேதியன்று முருகம்பாளையம் அருகே கணேசன் மற்றும் பொன்னுசாமிக்கு விபத்து நடந்ததாக எனக்கு போன் மூலமாக செல்வராஜ் என்பவர் தெரிவித்தார். நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் பார்க்கும்போது இருவரும் ரோட்டின் ஓரத்தில் மயங்கி இருந்தார்கள். உடனே 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். கணேசனை மேல்சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு பரிசோதித்த மருத்துவர் மேல்சிகிச்சைக்காக திருச்சி அழைத்து செல்லுமாறு கூறியதால் திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்று சேர்த்தோம். நான் கொடுமுடி காவல்நிலையம் வந்து விபத்து பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மறுநாள் கணேசன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:17 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்து போன கணேசன் என்பவர் உள்ளூர்காரர் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 55/2022**
**Prosecution Witness**:2

| Name | செந்தில் (PW2) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது வெள்ளகோவிலில் குடியிருந்து கொண்டு விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2312.2019ம் தேதியன்று இரவு சுமார் 07.00 மணியளவில் நானும் ராமசாமி என்பவரும் முருகம்பாளையம் அருகே நின்று பேசிகொண்டிருந்தோம். எனது சொந்தகாரர் கணேசன் என்பவர் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி அவரது TVS இருசக்கர வாகனத்தில் வந்தபோது எதிரே வந்த ஒரு TVS வாகனம் தாறுமாறாக வந்து கணேசன் வாகனத்தின் மீது மோதியது. மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்த்ததில்லை. இந்த விபத்தில் கணேசனுக்கு பின்தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பிறகு விபத்து சம்பந்தமாக கணேசன் வீட்டிற்கும், 108 ஆம்புலன்ஸ்க்கும் தகவல் தெரிவித்தோம். பிறகு கணேசன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சேர்த்தார்கள். பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவமனைக்கும், அதற்கு பிறகு திருச்சி அரசு மருத்துவமனைக்கும் கொண்டு சென்று சேர்த்தார்கள். ஆனால் சிகிச்சை பலனின்றி கணேசன் மறுநாள் மதியம் 02.00 மணியளவில் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:34 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

போலீசார் என்னை 24.12.2019 அன்று எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருச்சி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும் பொழுது சாட்சி இராமசாமி என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. போலீசார் என்னை ஒரு முறை மட்டும் தான் விசாரித்தாரா என்றால் இல்லை திருச்சி அரசு மருத்துவமனையில் விசாரித்துவிட்டு மீண்டும் 25.12.2019 அன்று காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் காவல் நிலையத்தில் மட்டும் விசாரித்து வாங்கினார்கள் எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்றால் விபத்து சம்பந்தமாக எழுதி கையொப்பம் வாங்கினார்கள். இறந்து போன கணேசன் எனக்கு மாமா உறவு முறை ஆவார். போலீசார் விசாரணையில் நான் எங்கிருந்து சம்பவத்தை பார்த்தேன் என கூறினேன் என்றால் முருகம்பாளையத்தில் ஒரு வீட்டிற்கு முன்பு பேசிக் கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக கூறி இருந்தேன். நான் வேலை சம்பந்தமாக வந்தபோது நானும் நண்பர் என்ற முறையில் அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்து நின்று கொண்டிருந்தேன் என்றால் சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பு வந்துவிட்டேன். ராமசாமி ஏற்கனவே சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தார். சம்பவம் நடந்த நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். கணேசன் ரோட்டின் மேபுறமாக வந்தார் என்றால் சரிதான். பொன்னுசாமி என்பவர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்தார் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்தியவர் ரோட்டில் கிழபுறத்தில் வந்தார். சம்பவம் நடந்த இடம் 3 ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:47 +0530

இருட்டாக இருந்ததால் கணேசன் வண்டியின் எந்த பகுதியில் வாகனம் மோதியது என எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தபோது கணேசனும் விபத்தை ஏற்படுத்தியவரும் ரோட்டின் எந்த பகுதியில் இருந்தார்கள் என்றால் இருவரும் சுய நினைவுடன் இருந்தார்கள் என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்பேன் என்றால் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்பேன். நான் சம்பவ இடத்தை விட்டு கிளம்பும் வரை போலீசார் அங்கு வரவில்லை என்றால் சரிதான். இறந்து போன கணேசன் தலை கவசம் அணிந்து இருந்தாரா என்றால் இல்லை. இறந்து போன கணேசன் எனக்கு உறவு முறை என்பதால் சம்பவத்தை நான் நேரில் பார்க்காமல் அவருக்காக நேரில் பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல மேற்படி விபத்து கணேசனின் அஜாக்கிரதையால் நடைபெற்றது என்றால் சரியல்ல

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.19 12:08:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.